# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 14.03.2023 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

41) ச.எண்.248/1A2 ல் உள்ள 74 செண்ட் நிலத்தில் 70 செண்ட் நிலம் 17, 18 பிரதிவாதிகளான கந்தசாமி மற்றும் பழனிக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். அதேபோல் ச.எண்.248/1A3 ல் எவ்வளவு நிலம் மேற்படி கந்தசாமி மற்றும் பழனிக்கு பாத்தியப்பட்டது என்றால், 74 செண்ட் நிலம் பாத்தியப்பட்டுள்ளது.

42) அம்மாசி உயிருடன் இருந்த காலத்தில் ச.எண்.248/1B ல் 3 வில்லை வீடுகளும், 1 கூரை வீடும் கட்டியிருந்தார் என்றால், சரிதான். ச.எண்.248/1A3 ல் மேற்படி அம்மாசி ACC அட்டை போட்ட 2 வீடுகள் கட்டவில்லை என்றால், சரிதான்.

43) ச.எண்.248/1A3 ல் 1 ACC அட்டை போட்ட வீடும், 1 கூரை வீடும் இருந்தது என்றால், சரிதான். அ.வ.எண்.194/2013 என்ற வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது மேற்படி காவேரி இவ்வழக்கின் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளை தன் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால், சரிதான்.

44) இவ்வழக்கின் பிரதிவாதிகள் எங்களிடம் வந்து பிரச்சனை செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு எந்த தேதியில், எந்த மாதத்தில், எந்த வருடத்தில் அவர்கள் பிரச்சனை செய்தார்கள் என என்னால் சொல்ல இயலுமா என்றால், சொல்ல முடியாது.

45) மேற்படி காவோரி மற்றும் அவரது வாரிசுகள் எங்கள் மீது தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.194/2013 என்ற வழக்கிற்கு எதிராக ஒரு வழக்கு போடவேண்டும் என்ற நோக்கத்திலும், ஒரு பொய்யான வழக்கு மூலத்தின் அடிப்படையில் தற்போது எங்களால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

46) அவ்வாறு பிரதிவாதிகள் எங்களிடம் பிரச்சனை செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக நான் போலீசில் புகார் எதுவும் அளித்துள்ளேனா என்றால், அளித்துள்ளேன். அவ்வாறு மேற்படி புகார் ஏதேனும் இவ்வழக்கில் நான் வழக்குரையுடனோ, என் முதல் விசாரணை சாட்சியத்துடனோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் நாளது தேதி வரை எந்த புகாரையோ, அல்லது அதன் ரசீதையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

47) அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை பழனி வகையறா எங்கள் மீது என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளனர் என்றால், தடவழி உரிமை கேட்டு தாக்கல் செய்துள்ளனர். அவ்வாறு எந்த சர்வே எண்ணில் தடவழி உள்ளதாக கேட்டுள்ளனர் என்றால், ச.எண்.248/1B ல் தடவழி உள்ளதாக கேட்டுள்ளனர்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.